**இணைப்பு I**

**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I இற்கான பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி**

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பின்வரும் பதவிகளுக்காக நியமனம் செய்வதற்கு இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I இல் உள்ள தகுதியுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | மாவட்டச் செயலகம் |
|---|---|
| 1 | கம்பஹ |
| 2 | மாத்தளை |
| 3 | நுவரெலியா |
| 4 | அம்பாறை |
| 5 | புத்தளம் |
| 6 | பொலன்னறுவை |
| 7 | பதுள்ளை |
| 8 | மொனராகலை |
| 9 | மன்னார் |

இலங்கை திட்டமிடல் சேவையில் தரம் I இல் விண்ணப்பதாரிகள் காணப்படாத சந்தர்ப்பத்தில், அத்தரத்தில் 03 வருட செயலூக்கமானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தையுடைய இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் II இல் உள்ள விண்ணப்பதாரிகளை பதவியில் முழு நேர அடிப்படையில் கடமையாற்றும் வகையில் நியமனம் வழங்க கவனத்திற் கொள்ளப்படுவார்கள்.

அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிக் கோவையின் 141 இன் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு, பின்னர் தொடர்ந்தும் சேவையை நீடிப்பதற்கு முடியுமான வகையில், அதிகபட்சம் ஒரு வருட காலப் பகுதிக்கு கடமைகளை நிறைவேற்ற நியமிக்கப்படுவார்கள்.

விண்ணப்பதாரிகள் **இத்துடன் இணைக்கப்பட்டுள்ள குறித்த மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப உரியவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ள** தமது சுயவிபரத் தகவல் பத்திரத்தை **செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நில மெதுர, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட , கொழும்பு 05 என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில்** 2023.03.30 ஆந் திகதிக்கு முன்னர் தமது திணைக்களத் தலைவரின் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியை 2023.03.28 ஆந் திகதிக்கு முன்னர் distaddivisionnew@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

தாமதமாக கிடைக்கப்பெறுகின்ற, பூரணமற்ற மற்றும் குறித்த விண்ணப்பத்தின் மாதிரிப் படிவத்தின் படி சமர்ப்பிக்கப்பட்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**2.0 விண்ணப்பதாரரின் தகவல்கள்**

**2.1 அனுபவம் மற்றும் தொழிற் தகைமைகள்**

i. இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I இல் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் இருத்தல் மிகவும் உசிதமானதாகும்.
ii. இலங்கை திட்டமிடல் சேவைப் பிரமாணத்தின் பின்னிணைப்பு (உ) வில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு துறையிலும் பட்டப்பின் பட்டத் தகைமையை பெற்றிருத்தல்.
iii. ஆங்கில மொழித் தேர்ச்சி.

**2.2 ஆற்றல்கள்**

( பயனுறுதி வாய்ந்த வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறு மேற்கொள்வதற்கு விண்ணப்பதாரர்களிடத்தில் ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.)

i. தொடர்புகளைக் கட்டியெழுப்புதல்
ii. மூலோபாயத் திட்டங்கள்
iii. குழு ரீதியாக நடவடிக்கையில் ஈடுபடுபவராக இருத்தல்

**2.3 நடத்தைத் தேர்ச்சி**

(பயனுறுதி வாய்ந்த வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடு மற்றும் செயற்பாடுகள்)

i. தலைமைத்துவப் பண்புகள்
ii. தொடர்பாடல் மற்றும் நிர்வாகம்
iii. அணி ரீதியான நடவடிக்கையில் ஈடுபடுபவராக இருத்தல்

**3.0 தெரிவு செய்யும் முறை**

சுயவிபரத் தகவல் மற்றும் நேர்முகப் பரீட்சையில் மதிப்பிடப்படும் சேவை மூப்புநிலை மற்றும் திறமை அடிப்படையில் இந்த தேர்ந்தெடுப்பு இடம்பெறும் / அடிப்படையாக அமையும். நேர்முகப் பரீட்சைக்காக குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையினர் மாத்திரம் அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரிகளின் குறுகிய பட்டியலிடலிற்கான தேர்வளவுகளை தயவுடன் 2022.09.15 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 6(b) பிரிவினைப் பார்க்கவும்.

### 3.1 புள்ளி வழங்கும் நடைமுறை

| தலைப்பு | அதிகபட்ச புள்ளிகள் | மதிப்பீட்டு முறை |
|---|---|---|
| **சிரேஸ்டத்துவம்**<br>சிரேஸ்டத்துவம் மிக்க விண்ணப்பதாரிகளுக்கு அதிக பட்ச புள்ளிகள் வழங்கப்படும் என்பதோடு, மற்றும் ஏனைய விண்ணப்பதாரர்களின் சிரேஸ்டத்துவத்தின் விகிதத்தில் புள்ளிகள் வழங்கப்படும். | 50 | சுயவிபரத் தகவல் பத்திரம் |
| **சமூக அபிவிருத்தி, பிரதேச/கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பான அனுபவம்**<br>குறித்த துறையில் சேவைக் காலம் / விடயத்துக்கான வெளிப்படுத்துகை தவிர, மேற்கூறிய துறைகளில் ஈடுபாடு காட்டுதல் அல்லது செயற்படுதல் மூலம் பெறப்பட்ட அறிவின் ஆழம் அல்லது நிபுணத்துவம் இங்கு மதிப்பிடப்படுகிறது. | 20** | |
| **தொழிற் தகைமைகள்**<br>**(1) இலங்கை திட்டமிடல் சேவைப் பிரமாணத்தின் பின்னிணைப்பு (உ) வில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு துறையிலும் பட்டப்பின் பட்டம் / தொழிற் தகைமை**<br>(அ) ஆராய்ச்சி அடிப்படையிலான பட்டப் பின் பட்டம் - 07 புள்ளிகள்<br>(ஆ) பாடநெறிக் கற்கை அடிப்படையிலான பட்டப் பின் பட்டம் - 06 புள்ளிகள்<br>(இ) பட்டப் பின் பட்ட டிப்ளோமா - 05 புள்ளிகள்<br>(ஈ) பட்டம் / பட்டப் பின் பட்டச் சான்றிதழ்/ உயர் தேசிய டிப்ளோமா - 04 புள்ளிகள்<br>(உ) டிப்ளோமா - 03 புள்ளிகள்<br>**(2) அபிவிருத்தி திட்டமிடல் பயிற்சி***<br>(அ) 03 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு - 01 புள்ளி<br>(ஆ) 10 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு - 0.5 புள்ளி<br>(இ) 03 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்கு - 0.2 புள்ளி<br>**(3) ஆங்கில மொழித் தேர்ச்சி**<br>(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றில் இருந்து பெறப்பட்ட டிப்ளோமா/ IELTS (Academic) மொத்த புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL- IBT 79 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL-CBT 213 அல்லது அதற்கு | 10 | |

| | | |
|---|---|---|
| மேற்பட்ட, அல்லது TOEFL- PBT550 அல்லது அதற்கு மேற்பட்ட - 02 புள்ளிகள்<br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்ற ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் - 01 புள்ளி<br>* உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| **ஆற்றல்கள்**<br>மேற்படி 2.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரிகளின் செயலார்வத்தின் படி பணிகளை பயனுறுதி மிக்கதாக நிறைவேற்றப்படுதல் வேண்டும். | 10** | நேர்முகப் பரீட்சை |
| **நடத்தைத் திறன்கள்**<br>மேற்படி 2.3 இல் காட்டப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரிகளின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் பயனுறுதி மிக்கதாக நிறைவேற்றப்படுதல் வேண்டும். | 10** | |
| ****** வினா மாதிரிகள் மற்றும் தர நிர்ணய அளவுகளுக்கு தயவுடன் 2022.09.15 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 02/2022 இன் இணைப்பு II ஐப் பார்க்கவும். | | |

குறிப்பு 1 – மேற்படி புள்ளி வழங்கும் நடைமுறையில் "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்" என்பதனால் கருதப்படுவது, இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும்.

குறிப்பு 2 – மேற்படி புள்ளி வழங்கும் நடைமுறையில் சகல பட்டப் பின் / தொழிற் தகைமைகள்,

(I.) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது (பிற பட்டம் வழங்கும் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற அவ்வாறானதொரு தகைமைக்கு இந்த ஆணைக்குழுவிடம் அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.)

(II.) அரசின் பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒப்பம்./ நீல் பண்டார ஹபுகின்ன
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
திகதி : 2023 மார்ச் மாதம் 15ஆந் திகதி